தரப்பட்டுள்ள நிறையை அளப்பதற்கு மேலே உள்ள படிக் கற்களில் தேவையான படிக்கற்களைக் குறிப்பிடுவோம்.

**உதாரணம் :-**




1 kg, 2 kg




..........................




..........................




..........................

**7** வசனங்களை எழுதித் தீர்ப்போம்.

**உதாரணம் :**

ஒரு விழாவிற்குப் பணியாரங்களைத் தயாரிப்பதற்காகக் கொண்டுவரப்பட்ட 5 kg 500 g சீனியில் 2 kg 250 g சீனி எஞ்சியிருந்தது. பணியாரங்களைத் தயாரிப்ப தற்குப் பயன்படுத்தப்பட்ட சீனியின் அளவு யாது?

| | | kg | g |
|---|---|---|---|
| கொண்டுவரப்பட்ட சீனியின் அளவு | = | 5 | 500 |
| எஞ்சியிருந்த சீனியின் அளவு | = | 2 | 250 |
| பணியாரங்களைத் தயாரிப்பதற்குப் பயன்படுத்திய சீனியின் அளவு | = | 3 | 250 |

(1) ஒரு கடையில் திங்கட்கிழமை 3 kg 800 g பருப்பும் செவ்வாய்க்கிழமை 2 kg 500 g பருப்பும் விற்கப்பட்டன. இரு நாட்களிலும் விற்கப்பட்ட பருப்பின் அளவுகளுக்கிடையே உள்ள வித்தியாசம் யாது?

(2) ஒரு பேக்கரியில் பாணைத் தயாரிப்பதற்கு 20 kg கோதுமை மா தேவைப் படுகின்றது. பேக்கரியில் இப்போது 10 kg 250 g கோதுமை மா உள்ளது. பாணைத் தயாரிப்பதற்கு மேலும் எவ்வளவு கோதுமை மா தேவை?

# கழித்தல் - 3



**1** கழிப்போம்.

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| 4 2 6 | 8 1 8 | 7 2 2 | 2 6 7 | 5 0 9 |
| − 1 5 3 | − 5 3 7 | − 4 8 0 | − 8 2 | − 2 7 6 |
| | | | | |

| (6) | (7) | (8) | (9) | (10) |
|---|---|---|---|---|
| 7 3 0 | 6 7 4 | 5 4 2 | 8 5 2 | 9 0 7 |
| − 3 9 0 | − 9 0 | − 4 5 1 | − 5 7 2 | − 7 5 6 |
| | | | | |

**2** அடைப்பு A இல் உள்ள ஓர் எண்ணிலிருந்து அடைப்பு B இல் உள்ள யாதாயினும் ஓர் எண்ணைக் கழிப்போம். (அத்தகைய 5 பிரசினங்களை எழுதித் தீர்க்க.)

**A**

| |
|---|
| 539 |
| 956 |
| 708 |

**B**

| |
|---|
| 470 |
| 92 |
| 183 |

**உதாரணம் :**

| | நூ | ப | ஒ |
|---|---|---|---|
| | 5 | 3 | 9 |
| − | 1 | 8 | 3 |
| | 3 | 5 | 6 |

**3** பிரசினங்களைத் தீர்ப்போம்.

(1) ஒரு வர்த்தகரிடம் 256 தர்ப்பூசணிகள் இருந்தன. அவர் அவற்றில் 182 ஐ விற்றால், எஞ்சியிருக்கும் தர்ப்பூசணிகளின் எண்ணிக்கை யாது?

(2) ஒரு புகையிரதத்தில் 868 பயணிகள் இருந்தனர். ஒரு குறித்த புகையிரத நிலையத்தில் 439 பயணிகள் இறங்கினால், புகையிரதத்தில் எஞ்சியிருந்த பயணிகளின் எண்ணிக்கை யாது?

(3) ஒரு நாளில் விற்பதற்காக உணவகத்திற்குக் கொண்டு வரப்பட்ட பணிசு களின் எண்ணிக்கை 325 ஆகும். அத்தினத்தின் இறுதியில் எஞ்சியிருந்த பணிசுகளின் எண்ணிக்கை 72 ஆகும். விற்கப்பட்ட பணிசுகளின் எண்ணிக்கை யாது?

(4) உறையூர் மகா வித்தியாலத்தில் 595 மாணவர்கள் இருக்கும் அதேவேளை கனிட்ட வித்தியாலயத்தில் 947 மாணவர்கள் உள்ளனர். மகா வித்தியாலயத்திலும் பார்க்கக் கனிட்ட வித்தியாலயத்தில் கூடுதலாக உள்ள மாணவர்களின் எண்ணிக்கை யாது?

(5) ஒரு நெற்களஞ்சியத்தில் 875 நெற் சாக்குகளை இட்டு வைக்கலாம். இப்போது அங்கு 580 நெற் சாக்குகள் உள்ளன. மேலும் எத்தனை நெற் சாக்குகளை அந்நெற்களஞ்சியத்தில் இடலாம்?

(6) 400 g நிறையுள்ள ஓர் உப்புத் தூள் பைக்கற்றிலிருந்து உப்புத்தூளைப் பயன்படுத்திய பின்னர் 130 g உப்புத்தூள் எஞ்சியிருந்தது. பயன்படுத்தப் பட்ட உப்புத் தூளின் அளவு யாது?

(7) ஒரு கிறிக்கெற் பந்தின் விலை 380 ரூபாய் ஆகும். அதனை வாங்குவதற்கு 500 ரூபாய்த் தாளைக் கொடுத்தால், கிடைக்கும் மீதிப் பணம் யாது?

(8) பம்பரகந்த நீர்வீழ்ச்சியின் உயரம் 263 m உம் தியலும நீர்வீழ்ச்சியின் உயரம் 171 m உம் ஆகும். தியலும நீர்வீழ்ச்சியிலும் பார்க்க பம்பரக்கந்த நீர்வீழ்ச்சி எவ்வளவு அளவினால் உயரம் கூடியது?

# கனவளவும் கொள்ளளவும் - 2 29

**1** மொத்தத்தை லீற்றரில் எழுதுவோம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (1) | 2500 *ml* | + | 500 *ml* | = 3000 *ml* | = 3 *l* |
| (2) | 750 *ml* | + | 250 *ml* | = ............ | = ............ |
| (3) | 1500 *ml* | + | 3500 *ml* | = ............ | = ............ |
| (4) | 3250 *ml* | + | 750 *ml* | = ............ | = ............ |
| (5) | 1300 *ml* | + | 2700 *ml* | = ............ | = ............ |

**2** கூட்டுவோம்.

(1)

| | *l* | *ml* |
|---|---|---|
| | 1 | 400 |
| + | 1 | 100 |
| | | |

(2)

| | *l* | *ml* |
|---|---|---|
| | 3 | 600 |
| + | 1 | 200 |
| | | |

(3)

| | *l* | *ml* |
|---|---|---|
| | 2 | 700 |
| + | 1 | 500 |
| | | |

(4)

| | *l* | *ml* |
|---|---|---|
| | 2 | 515 |
| + | 3 | 750 |
| | | |

(5)

| | *l* | *ml* |
|---|---|---|
| | 2 | 625 |
| + | 1 | 730 |
| | | |

(6)

| | *l* | *ml* |
|---|---|---|
| | 2 | 800 |
| + | 1 | 275 |
| | | |

**3** கழிப்போம்.

(1)

| | *l* | *ml* |
|---|---|---|
| | 5 | 500 |
| – | 3 | 250 |
| | | |

(2)

| | *l* | *ml* |
|---|---|---|
| | 2 | 300 |
| – | 1 | 100 |
| | | |

(3)

| | *l* | *ml* |
|---|---|---|
| | 3 | 750 |
| – | 1 | 500 |
| | | |

| (4) | | (5) | | (6) | |
|---|---|---|---|---|---|
| *l* | *ml* | *l* | *ml* | *l* | *ml* |
| 5 | 125 | 3 | 475 | 4 | 750 |
| − 2 | 225 | − 1 | 750 | − 1 | 900 |
| | | | | | |

## 4 பிரசினங்களைத் தீர்ப்போம்.

**உதாரணம் :**

ஒரு பாத்திரத்தில் இருந்த பாலின் அளவு 2 *l* 250 *ml* ஆகும். அதனுடன் மேலும் 1 *l* 500 *ml* பால் சேர்க்கப்பட்டது. இப்போது பாத்திரத்தில் உள்ள பாலின் மொத்த அளவு யாது?

| | | *l* | *ml* |
|---|---|---|---|
| பாத்திரத்தில் இருந்த பாலின் அளவு | = | 2 | 250 |
| சேர்க்கப்பட்ட பாலின் அளவு | = | 1 | 500 |
| பாலின் மொத்த அளவு | = | 3 | 750 |

(1) அம்மா 2 *l* பழச்சாற்றுடன் 3 *l* நீரைக் கலந்து பழப்பானத்தைத் தயாரித்தார். அவர் தயாரித்த பழப்பானத்தின் அளவு எத்தனை மில்லிலீற்றர்?

(2) அம்மா பணியாரங்களைத் தயாரிப்பதற்கு 2 *l* பாணியைக் கொண்டுவந்தார். அதில் 1*l* 500 *ml* பாணி பயன்படுத்தப்பட்டது. எஞ்சியிருந்த பாணியின் அளவு எத்தனை மில்லிலீற்றர்?

(3) ஒரு சிறிய மீன் தொட்டியை நிரப்புவதற்கு 3 *l* 500 *ml* நீர் தேவை. இப்போது தொட்டியில் 2 *l* 250 *ml* நீர் மாத்திரம் உள்ளது. தொட்டியை நிரப்புவதற்கு மேலும் எவ்வளவு நீர் தேவை?

(4) 2 *l* நீலத் தீந்தையுடன் 1 *l* 700 *ml* வெள்ளைத் தீந்தையைச் சேர்த்துச் சுவரில் பூசுவதற்கு ஒரு தீந்தைக் கலவை தயாரிக்கப்பட்டுள்ளது. கலவையில் உள்ள தீந்தையின் அளவு யாது?

# பெருக்கல் – 3

3 இனால் பெருக்குவோம்.

**உதாரணம்**

| | | | |
|---|---|---|---|
| | 2 | 4 | |
| × | | 3 | |
| | 7 | 2 | |
| | 1 | | |

→

**விடை இவ்வாறே பெறப்படுகிறது.**

| | ப | ஒ | |
|---|---|---|---|
| | 2 | 4 | |
| × | | 3 | |
| | 1 | 2 | ← முதலில் 4 ஆனது 3 ஆல் பெருக்கப்பட்டுள்ளது. |
| | 6 | 0 | ← இரண்டாவதாக 20 ஆனது 3 ஆல் பெருக்கப்பட்டுள்ளது. |
| | 7 | 2 | ← பின்னர் 12 உம் 60 உம் கூட்டப்பட்டுள்ளன. |

## 1 மூன்றினால் பெருக்குவோம்.

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| 23 × 3 | 31 × 3 | 40 × 3 | 52 × 3 | 44 × 3 |

| (6) | (7) | (8) | (9) | (10) |
|---|---|---|---|---|
| 56 × 3 | 87 × 3 | 90 × 3 | 78 × 3 | 95 × 3 |

## 2 பிரசினங்களைத் தீர்ப்போம்.

(1) ஒரு மீற்றர் துணியிலிருந்து 3 கதிரை உறைகளைத் தைக்கலாம். 12 மீற்றர் துணியிலிருந்து எத்தனை கதிரை உறைகளைத் தைக்கலாம்?

(2) ஒரு கொத்தில் 3 பலூன்கள் வீதம் 25 பலூன் கொத்துகளைப் பயன்படுத்திப் பிரதான மண்டபம் ஒன்று அலங்கரிக்கப்பட்டுள்ளது. தொங்கவிடப்பட்டுள்ள பலூன்களின் மொத்த எண்ணிக்கை யாது?

(3) ஒரு சுற்றுலாவிற்காக 56 மாணவர்களுக்கு ஒரு பேருந்து வீதம் மூன்று பேருந்துகள் ஈடுபடுத்தப்பட்டன. சுற்றுலாவில் பங்குபற்றிய மாணவர்களின் மொத்த எண்ணிக்கை யாது?

# பெருக்கல் - 3



4 இனால் பெருக்குவோம்.

**உதாரணம் :**

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | 6 | 5 | |
| × | | 4 | |
| 2 | 6 | 0 | |
| | 2 | | |

**விடை இவ்வாறே பெறப்படுகிறது.**

| | ப | ஒ | |
|---|---|---|---|
| | 6 | 5 | |
| × | | 4 | |
| | 2 | 0 | முதலில் 5 ஆனது 4 ஆல் பெருக்கப்பட்டுள்ளது |
| 2 | 4 | 0 | இரண்டாவதாக 60 ஆனது 4 ஆல் பெருக்கப்பட்டுள்ளது. |
| 2 | 6 | 0 | பின்னர் 20 உம் 240 உம் கூட்டப்பட்டுள்ளன. |

## 3 நான்கினால் பெருக்குவோம்.

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| 21 | 44 | 67 | 39 | 85 |
| × 4 | × 4 | × 4 | × 4 | × 4 |
| | | | | |

## 4 பிரசினங்களைத் தீர்ப்போம்.

(1) ஓர் உடையில் 12 பொத்தான்களைப் பொருத்த வேண்டியுள்ளது. அத்தகைய நான்கு உடைகளில் பொருத்துவதற்குத் தேவையான பொத்தான்களின் எண்ணிக்கை யாது?

(2) ஒரு சாடியில் நான்கு மிளகாய்க் கன்றுகள் வீதம் 75 சாடிகளில் நடுவதற்குத் தேவையான மிளகாய்க் கன்றுகளின் எண்ணிக்கை யாது?

(3) ஒரு மாணவனுக்கு நான்கு விசுக்கோத்துகள் வீதம் ஒரு சுற்றுலாவில் பங்குபற்றும் 94 மாணவர்களுக்கு விநியோகிப்பதற்கு எத்தனை விசுக்கோத்துகள் தேவை?

# வகுத்தல் - 3

**31**

## 3 இனால் வகுப்போம்.

**உதாரணம் :**

$$\begin{array}{r|l} & \phantom{0}42 \\ \hline 3 & 126 \\ & \underline{12}\downarrow \\ & \phantom{0}06 \\ & \phantom{00}\underline{6} \\ & \phantom{00}0 \end{array}$$

126 ÷ 3 = **42** ஆகும்.

**1** நெடும் வகுத்தல் முறையில் விடையைப் பெறுவோம்.

(1) 180 ÷ 3 (2) 154 ÷ 3 (3) 249 ÷ 3 (4) 295 ÷ 3

**உதாரணம் :**

$$\begin{array}{r|l} & 135 \\ \hline 3 & 405 \\ & \underline{3}\downarrow \\ & 10 \\ & \phantom{0}\underline{9}\downarrow \\ & \phantom{0}15 \\ & \phantom{0}\underline{15} \\ & \phantom{00}0 \end{array}$$

405 ÷ 3 = **135** ஆகும்.

**2** நெடும் வகுத்தல் முறையில் விடையைப் பெறுவோம்.

(1) 206 ÷ 3 (3) 348 ÷ 3 (5) 654 ÷ 3

(2) 801 ÷ 3 (4) 501 ÷ 3 (6) 482 ÷ 3

# வகுத்தல் - 3

**31**

4 இனால் வகுப்போம்.

**உதாரணம் :**

```
      4 0
  4 | 1 6 0
      1 6 ↓
        0 0
          0
          0
```

160 ÷ 4 = **40** ஆகும்.

**3** நெடும் வகுத்தல் முறையில் விடையைப் பெறுவோம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (1) | 128 ÷ 4 | (3) | 248 ÷ 4 | (5) | 165 ÷ 4 |
| (2) | 484 ÷ 4 | (4) | 404 ÷ 4 | (6) | 329 ÷ 4 |

**உதாரணம் :**

```
      1 3 6
  4 | 5 4 7
      4 ↓ |
      1 4 |
      1 2 ↓
        2 7
        2 4
          3
```

547 ÷ 4 = **136 மீதி 3 ஆகும்.**

**4** நெடும் வகுத்தல் முறையில் விடையைப் பெறுவோம்.

(1) 526 ÷ 4  (2) 652 ÷ 4  (3) 941 ÷ 4  (4) 723 ÷ 4

## 5 நெடும் வகுத்தல் முறையில் பிரசினங்களைத் தீர்ப்போம்.

(1) ஒரு பிள்ளைக்கு 3 பூக்கள் வீதம் 132 பூக்களை எத்தனை பிள்ளைகளுக்குப் பிரித்துக் கொடுக்கலாம்?

(2) ஒரு சுற்றுலாவின் இறுதியில் எஞ்சியிருந்த 168 ரூபாயை ஒவ்வொரு பிள்ளைக்கும் 4 ரூபாய் வீதம் பிரித்துக் கொடுத்தால், சுற்றுலாவில் பங்குபற்றிய பிள்ளைகளின் மொத்த எண்ணிக்கை யாது?

(3) ஒரு வாங்கில் மூன்று பிள்ளைகள் அமரலாம். 420 பிள்ளைகள் அமருவ தற்கு அத்தகைய எத்தனை வாங்குகள் தேவை?

(4) 640 எள்ளுருண்டைகளை ஒரு பைக்கற்றில் நான்கு வீதம் எத்தனை பைக்கற்றுகளில் இடலாம்?

(5) ஒரு விவசாயச் சங்கத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்து கொடுப்ப தற்குக் கொண்டுவரப்பட்ட தென்னங் கன்றுகளின் எண்ணிக்கை 584 ஆகும்.

(i) ஒருவருக்கு 3 தென்னங் கன்றுகள் வீதம் எத்தனை உறுப்பினர் களுக்குத் தென்னங் கன்றுகளைப் பகிர்ந்து கொடுக்கலாம்?

(ii) எஞ்சியிருக்கும் தென்னங் கன்றுகளின் எண்ணிக்கை யாது?

(6) பாடசாலை ஒன்றுக்கு நன்கொடையாக 680 புத்தகங்கள் கிடைத்தன.

(i) ஒரு மாணவனுக்கு 3 புத்தகங்கள் வீதம் வழங்கினால், புத்தகங்கள் வழங்கப்படத்தக்க மாணவர்களின் எண்ணிக்கை யாது?

(ii) எஞ்சியிருக்கும் புத்தகங்களின் எண்ணிக்கை யாது?

(iii) ஒரு மாணவனுக்கு 4 புத்தகங்கள் வீதம் வழங்கினால், புத்தகங்கள் வழங்கப்படத்தக்க மாணவர்களின் எண்ணிக்கை யாது?

# உரோம எண்குறிகள் 32

1 தொடக்கம் 10 வரையுள்ள உரோம எண்குறிகளை இனங் காண்போம்.

| இந்து - அராபிய எண்கள் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| உரோம எண் குறிகள் | i | ii | iii | iv | v | vi | vii | viii | ix | x |

**1** எண் பெயருக்குரிய உரோம எண்குறிளை இணைப்போம்.

| | |
|---|---|
| ஐந்து | iv |
| நான்கு | v |
| ஒன்பது | viii |
| மூன்று | vi |
| ஆறு | ix |
| எட்டு | iii |

**2** வெற்றிடங்களை நிரப்புவோம்.

| உரோம எண் குறிகள் | viii ........ | ii | iv | ........ | ........ | ........ | ix | vii | ........ | ........ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| இந்து - அராபிய எண்கள் | 8 | ........ | ........ | 10 | 1 | 6 | ........ | ........ | 3 | 5 |

**3** தரப்பட்டுள்ள உரோம எண்குறிகளுக்கு முன்னாலும் பின்னாலும் வரும் உரோம எண்குறிகளை எழுதுவோம்.

| முந்திய எண்குறி | உரோம எண்குறி | பிந்திய எண்குறி |
|---|---|---|
| ......ii...... | iii | ......iv...... |
| ................ | vi | ................ |
| ................ | ii | ................ |
| ................ | viii | ................ |
| ................ | iv | ................ |
| ................ | ix | ................ |

# வரைபுகள் - 2

33

**1** ஒரு பழக் கூடையில் ஒரு நாளில் விற்கப்பட்ட பழங்கள் பற்றிய தகவல்கள் பின்வரும் அட்டவணையில் உள்ளன.

| பழம் | விற்கப்பட்ட பழங்களின் எண்ணிக்கை |
|---|---|
| *மாம்பழம்* | 9 |
| *கொய்யாப்பழம்* | 12 |
| *விளாம்பழம்* | 10 |
| *தர்ப்பூசணி* | 14 |
| *அப்பிள்* | 8 |

- மேலே குறிப்பிட்ட தகவல்களை ஒரு நிரல் வரைபினால் வகைகுறிப்போம்.

- வரைபைக் கொண்டு வெற்றிடங்களை நிரப்புக.

(1) ......................... மாம்பழங்கள் விற்கப்பட்டுள்ளன.

(2) கொய்யாப்பழங்களிலும் பார்க்கக் கூடுதலாக ......................... தர்ப் பூசணிகள் விற்கப்பட்டுள்ளன.

(3) கூடுதலான எண்ணிக்கையில் விற்கப்பட்ட பழம் ......................... ஆகும்.

(4) குறைந்த எண்ணிக்கையில் விற்கப்பட்ட பழம் ......................... ஆகும்.

(5) அத்தினத்தில் விற்கப்பட்டுள்ள பழங்களின் மொத்த எண்ணிக்கை ......................... ஆகும்.

**2** தோட்டத்திற்கு வந்துள்ள விலங்குகளை எண்ணி அட்ட வணையை நிரப்புவோம்.



| விலங்கின் பெயர் | எண்ணிக்கை |
|---|---|
| அணில் | |
| கிளி | |
| மைனா | |
| வண்ணத்துப் பூச்சி | |
| நத்தை | |

- அட்டவணையைக் கொண்டு நிரல் வரைபை வரைவோம்.
- நிரல் வரைபைக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுவோம்.

(1) தோட்டத்திற்கு வந்துள்ள நத்தைகளின் எண்ணிக்கை யாது?

(2) எவ்வகை விலங்கு குறைந்த எண்ணிக்கையில் வந்துள்ளது?

(3) எவ்வகை விலங்கு கூடுதலான எண்ணிக்கையில் வந்துள்ளது?

(4) தோட்டத்திற்கு வந்துள்ள எல்லா விலங்குகளினதும் மொத்த எண்ணிக்கை யாது?

# பணம் – 2



கொடுக்கல் வாங்கல் செய்வோம்.



128.50 ரூபாய்



350.00 ரூபாய்



455.00 ரூபாய்



105.00 ரூபாய்



240.50 ரூபாய்



125.00 ரூபாய்

**1** பின்வரும் சந்தர்ப்பங்கள் ஒவ்வொன்றிலும் செலுத்த வேண்டிய பணத்தைக் காண்போம்.

**உதாரணம் :**





| | ரூபாய் | சதம் |
|---|---|---|
| | 350 | 00 |
| + | 128 | 50 |
| | 478 | 50 |

(1)





| ரூபாய் | சதம் |
|---|---|
| ........ | ....... |
| ........ | ....... |
| | |

(2)





| ரூபாய் | சதம் |
|---|---|
| ........ | ....... |
| ........ | ....... |
| | |

(3)





| ரூபாய் | சதம் |
|---|---|
| ........ | ....... |
| ........ | ....... |
| | |

(4)





| ரூபாய் | சதம் |
|---|---|
| ........ | ....... |
| ........ | ....... |
| ........ | ....... |
| | |
| | |

(5)




| ரூபாய் | சதம் |
|---|---|
| ........ | ....... |
| ........ | ....... |
| | |
| | |

**மீதியைக் காண்போம். சரியாவெனப் பார்ப்போம்.**

**2** பின்வரும் பொருள்களை வாங்கும்போது மீதிப் பணத்தைக் காண்போம்.

| தூரியன் | அப்பிள் | அன்னாசிப்பழம் | பப்பாசிப்பழம் |
|---|---|---|---|
|  |  |  |  |
| 300.00 **ரூபாய்** | 35.00 **ரூபாய்** | 280.00 **ரூபாய்** | 120.00 **ரூபாய்** |

**உதாரணம் :** ஓர் 500 ரூபாய்த் தாளைக் கொடுத்து ஓர் அன்னாசிப்பழத்தை வாங்குதல்

| **ரூபாய்** | **சதம்** |
|---|---|
| **500** | **00** |
| **– 280** | **00** |
| **220** | **00** |

(1) ஓர் 500 ரூபாய்த் தாளைக் கொடுத்து ஒரு பப்பாசிப்பழத்தை வாங்குதல்.

(2) ஒரு 100 ரூபாய்த் தாளைக் கொடுத்து 2 அப்பிள்பழங்களை வாங்குதல்.

(3) ஓர் 500 ரூபாய்த் தாளையும் ஒரு 100 ரூபாய்த் தாளையும் கொடுத்து 2 அன்னாசிப்பழங்களை வாங்குதல்.

(4) ஓர் 1000 ரூபாய்த் தாளைக் கொடுத்து இரு தூரியன் பழங்களை வாங்குதல்.

**3** மீதிப் பணத்தைக் காண்போம்.

| பொருள் | குறித்த விலை ரூபாய் | சதம் | செலுத்திய பணம் ரூபாய் | சதம் | மீதிப் பணம் ரூபாய் | சதம் |
|---|---|---|---|---|---|---|
| பென்சில் | 10 | 50 | 20 | 00 | | |
| உணவுப் பெட்டி | 28 | 00 | 30 | 00 | | |
| பை | 110 | 00 | 200 | 00 | | |
| போத்தல் | 257 | 00 | 300 | 00 | | |
| புத்தகம் | 12 | 75 | 20 | 00 | | |

**4** விலைப் பட்டியலைப் பார்த்துச் சிட்டையை நிரப்புவோம்.

| காய்கறி வகை | அளவு | விலை ரூபாய் | சதம் |
|---|---|---|---|
| கரட் | 1 kg | 90 | 00 |
| பீட்றூட் | 1 kg | 60 | 00 |
| கோவா | 1 kg | 70 | 00 |
| முள்ளங்கி | 1 kg | 80 | 00 |
| வாழைக்காய் | 1 kg | 110 | 00 |

| காய்கறி வகை | அளவு | 1 kg இன் விலை ரூபாய் | சதம் | பெறுமானம் ரூபாய் | சதம் |
|---|---|---|---|---|---|
| கரட் | 500 g | 90 | 00 | 45 | 00 |
| பீட்றூட் | 500 g | | | | |
| கோவா | 250 g | | | | |
| மொத்தப் பணம் | | | | | |

5 தரப்பட்டுள்ள விலைக்கும் அளவுகளுக்கும் ஏற்பச் சிட்டைகளை நிரப்புவோம்.

| பொருள்கள் | அளவு | விலை | |
|---|---|---|---|
| | | ரூபாய் | சதம் |
| சீனி | 1 kg | 100 | 00 |
| பால் மா | 200 g | 200 | 00 |
| தேயிலை | 100 g | 75 | 00 |
| உருளைக் கிழங்கு | 1 kg | 80 | 00 |
| அரிசி | 1 kg | 98 | 00 |
| மீன் | 250 g | 110 | 00 |

(1)

| பொருள் | அளவு | விலை | |
|---|---|---|---|
| | | ரூபாய் | சதம் |
| சீனி | 500 g | | |
| பால் மா | 1 kg | | |
| தேயிலை | 200 g | | |
| செலுத்த வேண்டிய மொத்தப் பணம் | | | |

(2)

| பொருள் | அளவு | விலை | |
|---|---|---|---|
| | | ரூபாய் | சதம் |
| அரிசி | 5 kg | | |
| உருளைக் கிழங்கு | 500 g | | |
| மீன் | 500 g | | |
| செலுத்த வேண்டிய மொத்தப் பணம் | | | |

# வடிவங்களும் வெளியும் 35



மேலே காட்டப்பட்டுள்ள தங்கிரத்தைப் (சீன விளையாட்டை குறிக்கும் பெயர்) பயன்படுத்தி உருக்களை அமைப்போம்.







**1** பின்னிணைப்பு 1 இல் காட்டப்பட்டுள்ள தங்கிரங்களைப் பயன்படுத்தி இத்தகைய வேறு உருக்களை அமைத்துப் பயிற்சிப் புத்தகத்தில் ஒட்டுவோம்.

**2** 5 cm × 5cm அளவுள்ள நிறத் தாள் துண்டுகளைப் பெற்றுக் கொள்வோம். இரண்டாக மடித்துப் பின்வருமாறு உருக் களை வெட்டிக் கொள்வோம். அவற்றை விரித்து, கிடைக்கும் சமச்சீர் உருக்களைப் பயிற்சிப் புத்தகத்தில் ஒட்டுவோம்.



**3** பின்வரும் உருக்களைப் பார்த்து அட்டவணையை நிரப்புவோம்.




| சமச்சீர் உரு | சமச்சீரில்லாத உரு |
|---|---|
| A | C |
| | |
| | |
| | |
| | |

**4** பின்வரும் உருக்களில் ஒரு சமச்சீரச்சு வரையப் பட்டுள்ளது. அவற்றில் வேறொரு சமச்சீரச்சை வரைவோம்.



# மீட்டற் பயிற்சி – மூன்றாம் தவணை **36**

**1** விடை எழுதுவோம்.

(1) **410, 3409, 5499, 1907** என்னும் எண்களை இறங்குவரிசையில் எழுதுவோம்.

(2) **6708, 876, 8076, 6807** என்னும் எண்களை ஏறுவரிசையில் எழுதுவோம்.

**2** வட்டத்தில் உள்ள இலக்கங்களைக் கொண்டு

(1) அமைக்கத்தக்க மிகப் பெரிய எண்ணை எழுதுவோம்.

(2) அமைக்கத்தக்க மிகச் சிறிய எண்ணை எழுதுவோம்.

(3) அமைக்கத்தக்க வேறு இரு எண்களை எழுதுவோம்.

(4) மேலே எழுதப்பட்ட நான்கு எண்களையும் ஏறுவரிசையில் எழுதுவோம்.

**2 6 5 7**

**3** ஒரு தொழிற்சாலையை அமைப்பதற்காக 4 நாட்களில் கொண்டுவரப்பட்ட செங்கற்களின் எண்ணிக்கைகள் கீழே தரப்பட்டுள்ளன. அத்தகவலைக் கொண்டு கீழே கேட்கப்படும் வினாக்களுக்கு விடை எழுதுவோம்.

| நாட்கள் | செங்கற்களின் எண்ணிக்கை |
|---|---|
| திங்கட்கிழமை | **2124** |
| செவ்வாய்க்கிழமை | **2412** |
| புதன்கிழமை | **4122** |
| வியாழக்கிழமை | **2214** |

(1) குறைந்த எண்ணிக்கையில் செங்கற்கள் எந்நாளில் கொண்டு வரப்பட்டன? அவ்வெண்ணிக்கை யாது?

(2) கூடுதலான எண்ணிக்கையில் செங்கற்கள் எந்நாளில் கொண்டு வரப்பட்டது? அவ்வெண்ணிக்கை யாது?

(3) நான்கு நாட்களிலும் கொண்டு வரப்பட்ட செங்கற்களின் எண்ணிக்கைகளை ஏறுவரிசையில் எழுதுவோம்.

**4** விடை எழுதுவோம்.

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 2324 | 2841 | 2324 | 1150 |
| + 1292 | + 1623 | + 1418 | + 2271 |
| ____ | ____ | ____ | ____ |

| (5) | (6) | (7) | (8) |
|---|---|---|---|
| 1248 | 4042 | 3265 | 1334 |
| + 1025 | + 1595 | + 1725 | + 2047 |
| ____ | ____ | ____ | ____ |

| (9) | (10) | (11) | (12) |
|---|---|---|---|
| 2030 | 3202 | 2106 | 3134 |
| 1264 | 2124 | 637 | 1643 |
| + 3192 | + 2434 | + 43 | + 45☐☐ |
| ____ | ____ | ____ | ☐☐78 |

**5** பிரசினங்களைத் தீர்ப்போம்.

(1) மூன்று நண்பர்கள் சேகரித்த முத்திரைகளின் எண்ணிக்கைகள் முறையே 302, 76, 1508 ஆகும். மூவரும் சேகரித்த முத்திரைகளின் மொத்த எண்ணிக்கை யாது?

(2) ஓர் ஓட்டுத் தொழிற்சாலையில் மூன்று நாட்களில் உற்பத்தி செய்யப்பட்ட ஓடுகளின் எண்ணிக்கைகள் முறையே 1208, 1654, 1020 ஆகும். மூன்று நாட்களிலும் உற்பத்தி செய்யப்பட்ட ஓடுகளின் மொத்த எண்ணிக்கை யாது?

(3) மூன்று மாணவர்கள் பாடசாலைக்கு எடுத்துச் சென்ற மூன்று தண்ணீர்ப் போத்தல்களில் உள்ள நீரின் அளவுகள் 1050 *ml*, 750 *ml*, 1150 *ml* ஆகும். மூன்று போத்தல்களிலும் உள்ள நீரின் மொத்த அளவு யாது?

**6** தரப்பட்டுள்ள பொருள்களின் நிறையைப் பார்த்துக் கீழே கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுவோம்.




250 g | 750 g | 500 g | 450 g | 100 g

(1) தேயிலையினதும் சீனியினதும் மொத்த நிறையைக் கிலோகிராமிலும் கிராமிலும் எழுதுவோம்.

(2) சவர்க்காரத்தூள் பைக்கற்றிலும் பார்க்கப் பால்மாப் பைக்கற்று எவ்வளவினால் நிறை கூடியது?

(3) சீனிப் பைக்கற்றின் நிறை விசுக்கோத்துப் பைக்கற்றின் நிறையின் எத்தனை மடங்காகும்?

**7** விடை எழுதுவோம்.

(1)

| | kg | g |
|---|---|---|
| | 1 | 300 |
| + | 2 | 700 |

(2)

| | kg | g |
|---|---|---|
| | 5 | 125 |
| + | 3 | 900 |

(3)

| | kg | g |
|---|---|---|
| | 1 | 500 |
| + | | 750 |

(4)

| | kg | g |
|---|---|---|
| | 3 | 915 |
| − | 1 | 405 |

(5)

| | kg | g |
|---|---|---|
| | 6 | 100 |
| − | 4 | 500 |

(6)

| | kg | g |
|---|---|---|
| | 9 | 50 |
| − | 7 | 400 |

**8** வசனங்கள் எழுதித் தீர்ப்போம்.

(1) அம்மா 2 kg வெள்ளைப் பச்சையரிசியையும் 2 kg 500 g சிவப்புப் பச்சையரிசியையும் கொண்டு வந்தார். அம்மா கொண்டு வந்த அரிசி வகைகளின் மொத்த நிறை யாது?

(2) 50 kg நிறையுள்ள ஒரு சீனிச் சாக்கிலிருந்து 17 kg 500 g சீனியை விற்ற பின்னர், எஞ்சியிருக்கும் சீனியின் அளவு யாது?

(3) முதலாம் மாச்சாக்கின் நிறை 40 kg 400 g ஆகும். இரண்டாம் மாச் சாக்கின் நிறை 35 kg 250 g ஆகும். முதலாம் மாச்சாக்கின் நிறை இரண்டாம் மாச்சாக்கின் நிறையிலும் பார்க்க எவ்வளவினால் கூடியது?

(4) ஒரு வகைப் பணியாரங்களைத் தயாரிப்பதற்கு 2 kg 400 g மா தேவை. வீட்டில் 1 kg 600 g மா மாத்திரம் உள்ளது. மேலும் எவ்வளவு மா தேவை?

**9** கழிப்போம்.

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| 574 | 605 | 748 | 527 | 846 |
| − 392 | − 230 | − 488 | − 94 | − 539 |

| (6) | (7) | (8) | (9) | (10) |
|---|---|---|---|---|
| 870 | 965 | 752 | 796 | 633 |
| − 646 | − 859 | − 391 | − 68 | − 363 |

# மீட்டற் பயிற்சி – மூன்றாம் தவணை 36

**10** பிரசினங்களைத் தீர்ப்போம்.

(1) 125 பாற்பேணிகளிலிருந்து 94 பாற்பேணிகள் அகற்றப்படுமெனின் எஞ்சியிருக்கும் பாற்பேணிகளின் எண்ணிக்கை யாது?

(2) தரம் 4 இல் உள்ள 270 பிள்ளைகளில் 237 பிள்ளைகள் ஆண்டுச் சுற்றுலாவில் பங்குபற்றினால், சுற்றலாவில் பங்குபற்றாத பிள்ளைகளின் எண்ணிக்கை யாது?

**11** பிரசினங்களைத் தீர்ப்போம்.

(1) ஒரு மீன் தொட்டியில் 10 *l* நீரை நிரப்பலாம். அதில் 5 *l* 500 *ml* நீர் உள்ளது. தாங்கியை நிரப்புவதற்கு மேலும் எவ்வளவு நீர் தேவை?

(2) ஒரு போத்தலில் 700 *ml* பழச்சாறு இருந்தது. அதனுடன் 3 *l* 500 *ml* நீரைக் கலந்து பழப்பானம் தயாரிக்கப்பட்டது. தயாரித்த பழப் பானத்தின் மொத்த அளவு யாது?

**12** பெருக்குவோம்.

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| 33 | 85 | 42 | 80 | 46 |
| × 3 | × 3 | × 4 | × 4 | × 2 |
| | | | | |

| (6) | (7) | (8) | (9) | (10) |
|---|---|---|---|---|
| 98 | 58 | 67 | 87 | 95 |
| × 2 | × 5 | × 5 | × 10 | × 10 |
| | | | | |

**13** பிரசினங்களைத் தீர்ப்போம்.

(1) ஒரு பிள்ளைக்கு இரண்டு பென்சில்கள் வீதம் 49 பிள்ளைகளுக்குக் கொடுப்பதற்குத் தேவையான பென்சில்களின் எண்ணிக்கை யாது?

(2) ஒரு வாங்கில் மூவர் வீதம் 75 வாங்குகளில் எத்தனை பேர் அமரலாம் ?

(3) ஒரு நடனக் குழுவில் 64 பேர் உள்ளனர். ஒருவருக்கு 4 வளையல்கள் வீதம் எல்லோருக்கும் கொடுப்பதற்கு எத்தனை வளையல்கள் தேவை?

(4) எனது அண்ணாவின் தற்போதைய வயது 15 ஆகும். எனது பாட்டனின் தற்போதைய வயது அண்ணாவின் வயதின் ஐந்து மடங்காகும். பாட்டனின் தற்போதைய வயது யாது?

**14** நெடும் வகுத்தல் முறையில் விடையைப் பெறுவோம்.

(1) 372 ÷ 3 (3) 905 ÷ 4 (5) 731 ÷ 2

(2) 708 ÷ 2 (4) 248 ÷ 4 (6) 150 ÷ 3

**15** பிரசினங்களைத் தீர்ப்போம்.

(1) ஒரு பாடசாலையின் தரம் 4 இல் உள்ள பிள்ளைகளுக்கு ஒருவருக்கு இரண்டு பேனைகள் வீதம் 620 பேனைகள் விநியோகிக்கப்பட்டன. தரம் 4 இல் உள்ள பிள்ளைகளின் எண்ணிக்கை யாது?

(2) ஓர் உடற்பயிற்சிக் காட்சியில் மாணவர்களுக்கு ஒரு மாணவனுக்கு நான்கு வீதம் 872 பலூன்கள் விநியோகிக்கப்பட்டன. இவ்வுடற் பயிற்சிக் காட்சியில் பங்குபற்றிய மாணவர்களின் எண்ணிக்கை யாது?

(3) 215 பந்துகளை ஒரு பாடசாலைக்கு இரண்டு வீதம் எத்தனை பாடசாலைகளுக்கு வழங்கலாம்?

(4) 560 மாம்பழங்கள் சமமாக மூன்று குவியல்களாகப் பிரிக்கப்பட்டன. ஒரு குவியலில் உள்ள மாம்பழங்களின் எண்ணிக்கை யாது? எத்தனை மாம்பழங்கள் எஞ்சியிருக்கும்?

**16** தரப்பட்ட உரோம எண்குறிகளிற்கு முன்னாலும் பின்னாலும் உள்ள உரோம எண்குறிகளை எழுதுவோம்.

| | முன்னால் | | பின்னால் |
|---|---|---|---|
| (1) | ............... | ii | ............... |
| (2) | ............... | v | ............... |
| (3) | ............... | ix | ............... |
| (4) | ............... | viii | ............... |
| (5) | ............... | vii | ............... |

**17** காலை உணவுக்காக விருப்பமான உணவு வகை பற்றி விசாரித்தபோது ஒரு வகுப்பில் உள்ள மாணவர் களிடமிருந்து கிடைத்த தகவல்கள் பின்வரும் அட்ட வணையில் தரப்பட்டுள்ளன.

| உணவு வகை | விரும்பும் மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|
| அப்பம் | 5 |
| ரொட்டி | 8 |
| பிட்டு | 5 |
| இடியப்பம் | 10 |
| சோறு | 7 |

- மேலே தரப்பட்ட தகவல்களை ஒரு நிரல் வரைபில் வகைகுறிப்போம்.
- நிரல் வரைபைக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுவோம்.

(1) சம எண்ணிக்கையிலான மாணவர்கள் எந்த இரு வகை உணவுகளை விரும்புகின்றனர்?

(2) கூடுதலான மாணவர்கள் விரும்பும் உணவு வகை யாது? எத்தனை மாணவர்கள் அதனை விரும்புகின்றனர்?

**18** பின்வரும் விலைப் பட்டியலைப் பார்த்து வினாக்களுக்கு விடை எழுதுவோம்.

| விலைப் பட்டியல் | |
|---|---|
|  | 11.00 ரூபாய் |
|  | 12.25 ரூபாய் |
|  | 90.00 ரூபாய் |
|  | 504.00 ரூபாய் |

(1) ஒரு புத்தகத்தையும் ஒரு பேனையையும் வாங்குவதற்குத் தேவையான பணம் யாது?

(2) ஒரு வர்ணப் பெட்டியையும் ஒரு பேனையையும் வாங்குவதற்குத் தேவையான பணம் யாது?

(3) இரு புத்தகங்களையும் ஒரு பேனையையும் வாங்குவதற்குத் தேவையான பணம் யாது?

(4) ஒரு புத்தகப் பையை வாங்குவதற்கு ஓர் 500 ரூபாய்த் தாளையும் ஓர் 20 ரூபாய்த் தாளையும் கொடுக்கும்போது கிடைக்கும் மீதிப் பணம் யாது?

**19** வெற்றிடங்களை நிரப்புவோம்.

| பொருள் | 1 kg இன் விலை ரூபாய் | சதம் | வாங்கிய அளவு | செலுத்த வேண்டிய பணம் ரூபாய் | சதம் |
|---|---|---|---|---|---|
| பருப்பு | 120 | 00 | 2 kg | | |
| மிளகாய் | 110 | 00 | 1 kg | | |
| கருவாடு | 600 | 00 | 500 g | | |
| உருளைக் கிழங்கு | 80 | 00 | 500 g | | |

**20** பின்வரும் உருக்களைச் சமச்சீர் வகைகுறிக்கப்படுமாறு பூரணப்படுத்துவோம்.



# மீட்டற் பயிற்சி – ஆண்டிறுதி 37

**1** அட்டவணையைப் பிரதிசெய்து வெற்றிடங்களை நிரப்புவோம்.

| எண் | இலக்கம் | இலக்கம் இருக்கும் இடம் | இலக்கத்தினால் காட்டப்படும் பெறுமானம் |
|---|---|---|---|
| 42 | 4 | | |
| 368 | 3 | | |
| 2150 | 2 | | |
| 3806 | 8 | | |
| 6990 | 0 | | |
| 7000 | 7 | | |
| 9076 | 0 | | |

**2** பின்வரும் எண்களை எண்சட்டங்களில் வரைந்து காட்டுவோம். அவ்வெண்களை விரித்து எழுதுவோம்.

(1) 159 (2) 3041 (3) 5000 (4) 8444

**3** விடை எழுதுவோம்.

(1) 7, 2, 4 என்னும் இலக்கங்களைப் பயன்படுத்தி 400 இலும் கூடிய ஓர் எண்ணை எழுதுவோம்.

(2) 7, 2, 4 என்னும் இலக்கங்களைப் பயன்படுத்தி 300 இலும் குறைந்த ஓர் எண்ணை எழுதுவோம்.

(3) 3, 6, 9 என்னும் இலக்கங்களைப் பயன்படுத்தி 600 இற்கும் 700 இற்குமிடையே உள்ள இரு எண்களை எழுதுவோம்.

(4) 1, 5, 9, 6 என்னும் இலக்கங்களைப் பயன்படுத்தி 5000 இலும் கூடிய இரு எண்களை எழுதுவோம்.

**4** கோலத்தை இனங்கண்டு வெற்றிடங்களுக்குப் பொருத்தமான எண்களை எழுதுவோம்.

(1) **7, 9, 11, ..........., ..........., ..........., ..........., ...........**

(2) **..........., ..........., 161, 164, 167, ..........., ..........., ...........**

(3) **31, 36, 41, ..........., ..........., ..........., ...........**

(4) **..........., ..........., ..........., ..........., 44, 54, 64**

(5) **200, 204, 208, ..........., ..........., ..........., ...........**

**5** விடை எழுதுவோம்.

(1) 7 ஐத் தொடக்க எண்ணாகக் கொண்டு இரண்டின், மூன்றின், நான்கின், ஐந்தின், பத்தின் ஓர் எண்கோலம் வீதம் உருவாக்குவோம். (எட்டு எண்கள் வரைக்கும்).

(2) 25 ஐத் தொடக்க எண்ணாகக் கொண்டு இரண்டின், மூன்றின், நான்கின், ஐந்தின், பத்தின் ஓர் எண்கோலம் வீதம் உருவாக்குவோம். (பத்து எண்கள் வரைக்கும்).

**6** வெற்றிடங்களை நிரப்புவோம்.

| எண்பெயர் | இந்து - அராபிய எண்கள் | உரோம எண்குறிகள் |
|---|---|---|
| ஐந்து | | v |
| ஆறு | | |
| | 1 | |
| | 4 | |
| | | x |
| மூன்று | | |
| | | ii |
| ஏழு | | |
| | | viii |
| ஒன்பது | | |

**7** சம நிறைகளை இணைப்போம்.

| | |
|---|---|
| 5 kg | 9 kg 400 g |
| 4 kg 925 g | 1111 g |
| 5060 g | 4925 g |
| 1 kg 111 g | 5000 g |
| 9400 g | 5 kg 60 g |

**8**



10 g   20 g   50 g   100 g   5 kg

மேலே உள்ள படிக்கற்களை மாத்திரம் பயன்படுத்தித் தரப்பட்டுள்ள நிறைகளை அளக்கத்தக்க விதத்தை எழுதுவோம்.

உதாரணம் - 5 kg 150 g = 5 kg + 100 g + 50 g

(1) 180 g = ..........................................................

(2) 5 kg 30 g = ..........................................................

(3) 5 kg 70 g = ..........................................................

(4) 5 kg 110 g = ..........................................................

(5) 5 kg 120 g = ..........................................................

**9** கணிப்போம்.

(1)

| kg | g |
|---|---|
| 4 | 250 |
| + 1 | 125 |
| | |

(2)

| kg | g |
|---|---|
| 7 | 425 |
| + 1 | 650 |
| | |

(3)

| kg | g |
|---|---|
| 9 | 100 |
| + 1 | 975 |
| | |

(4)

| kg | g |
|---|---|
| 5 | 700 |
| − 2 | 400 |
| | |

(5)

| kg | g |
|---|---|
| 6 | 425 |
| − 4 | 250 |
| | |

(6)

| kg | g |
|---|---|
| 9 | 675 |
| − 5 | 750 |
| | |

**10** வசனங்கள் எழுதித் தீர்ப்போம்.

(1) ஒரு தேயிலைத் தோட்டத்தில் முதலாம் நாளில் 43 kg 400 g தேயிலைக் கொழுந்தும் இரண்டாம் நாளில் 33 kg 850 g தேயிலைக் கொழுந்தும் பறிக்கப்பட்டன. இரு நாட்களிலும் பறிக்கப்பட்ட தேயிலைக் கொழுந்தின் மொத்த நிறை யாது?

(2) ஒரு சீமெந்துப் பையில் 48 kg 500 g சீமெந்து இருந்தது. அச் சீமெந்தினைப் பயன்படுத்திக் கான் ஒன்றினைக் கட்டிய பின் எஞ்சி யிருந்த சீமெந்து 14 kg 600 g ஆகும். பயன்படுத்திய சீமெந்தின் நிறை யாது?

(3) 50 kg அரிசி உள்ள ஒரு சாக்கிலிருந்து 25 kg 500 g அரிசி விற்கப் பட்டது. அரிசிச் சாக்கில் எஞ்சியிருந்த அரிசியின் நிறை யாது?

**11** கூட்டுவோம்.

| | | | |
|---|---|---|---|
| (1) 156 + 28 | (2) 324 + 308 | (3) 507 + 149 | (4) 843 + 9 |
| (5) 250 + 291 | (6) 192 + 630 | (7) 725 + 184 | (8) 819 + 90 |
| (9) 179 + 417 | (10) 175 + 774 | (11) 1348 + 3249 | (12) 4235 + 2092 |
| (13) 5624 + 2930 | (14) 8327 + 408 | (15) 5884 + 2414 | (16) 6901 + 1079 |
| (17) 2025 + 1343 + 4504 | (18) 1500 + 2093 + 3214 | (19) 3242 + 3520 + 1927 | (20) 3303 + 2222 + 1125 |

**12** வெற்று அடைப்புகளை நிரப்புவோம்.

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| | | | | □ 2 6 4 |
| 3 □ 3 | 5 8 6 | □ 5 □ 3 | 4 2 □ 3 | 5 3 2 □ |
| + □ 1 □ | + □ □ □ | + 4 □ 4 6 | + □ 5 8 □ | + 1 □ 3 |
| 9 9 8 | 9 8 7 | 6 3 8 □ | 6 □ 3 7 | 7 □ 2 8 |

**13** பின்வரும் அடைப்பில் உள்ள எண்களைப் பயன்படுத்திக் கீழேயுள்ள வினாக்களுக்கு விடை எழுதுவோம்.

156 224 1027 3206 517

(1) கூட்டுத்தொகையாக 673 கிடைக்கும் இரு எண்களை எழுதுவோம்.
(2) கூட்டுத்தொகையாக 1251 கிடைக்கும் இரு எண்களை எழுதுவோம்.
(3) கூட்டுத்தொகையாக 3586 கிடைக்கும் மூன்று எண்களை எழுதுவோம்.

**14** கழிப்போம்.

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| 40 | 28 | 80 | 79 | 96 |
| – 20 | – 16 | – 46 | – 29 | – 59 |
| | | | | |

| (6) | (7) | (8) | (9) | (10) |
|---|---|---|---|---|
| 597 | 680 | 953 | 748 | 514 |
| – 348 | – 264 | – 390 | – 290 | – 307 |
| | | | | |

**15** பிரசினங்களைத் தீர்ப்போம்.

(1) 655 பக்கங்கள் உள்ள ஒரு புத்தகத்தில் 390 பக்கங்கள் வாசிக் கப்பட்டதெனின், இன்னும் வாசிப்பதற்கு உள்ள பக்கங்களின் எண்ணிக்கை யாது?

(2) குமாரிடம் உள்ள முத்திரைகளின் எண்ணிக்கை 842 ஆகும். நாதனி டம் உள்ள முத்திரைகளின் எண்ணிக்கை 560 ஆகும். நாதனிடம் உள்ள முத்திரைகளின் எண்ணிக்கை குமாரிடம் உள்ள முத்திரை களின் எண்ணிக்கையிலும் பார்க்க எவ்வளவு குறைவாகும்?

**16** வெற்று அடைப்புகளை நிரப்புவோம்.

| | (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|---|
| | 6 5 | □ □ | 9 2 7 | □ 4 2 | 4 □ □ |
| – | □ □ | 4 8 | 5 □ 2 | 4 □ 5 | □ 9 2 |
| | 4 1 | 2 4 | 3 5 5 | 3 0 7 | 2 4 6 |

**17** விடை எழுதுவோம்.

| | (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|---|
| | 7 9 | 6 8 | □ 4 | 8 □ | 9 □ |
| × | 2 | 3 | 4 | 5 | 1 0 |
| | □ □ □ | □ □ □ | 5 6 | 4 3 0 | 9 2 0 |

**18** பிரசினங்களைத் தீர்ப்போம்.

(1) (i) ஒரு நிரையில் மூன்று கதிரைகள் வீதம் **84** நிரைகளை அமைப்பதற்குத் தேவையான கதிரைகளின் எண்ணிக்கை யாது?

(ii) ஒரு நிரையில் நான்கு கதிரைகள் வீதம் **84** நிரைகளை அமைப்பதற்குத் தேவையான கதிரைகளின் எண்ணிக்கை யாது?

(2) ஒரு தர்ப்பூசணி **5** பேருக்குப் பிரித்துக் கொடுப்பதற்குப் போதியதெனின், அவ்வாறான **75** தர்ப்பூசணிகள் எத்தனை பேருக்குப் போதும்?

(3) ஒரு பைக்கற்றில் விசுக்கோத்துகள் **10** வீதம் பொதிசெய்யப்பட்டுள்ளன. அத்தகைய **85** விசுக்கோத்துப் பைக்கற்றுகளில் உள்ள விசுக்கோத்துகளின் எண்ணிக்கை யாது?

**19** நெடும் வகுத்தல் முறையில் வகுப்போம்.

(1) **904 ÷ 2**    (3) **903 ÷ 3**    (5) **800 ÷ 4**

(2) **809 ÷ 2**    (4) **804 ÷ 3**    (6) **502 ÷ 4**

**20** நெடும் வகுத்தல் முறையில் பிரசினங்களைத் தீர்ப்போம்.

(1) 645 ஈரப்பலாக்காய்களைச் சமமாக மூன்று குவியல்களாகப் பிரிக்கும்போது ஒரு குவியலில் உள்ள ஈரப்பலாக்காய்களின் எண்ணிக்கை யாது?

(2) தந்தை 916 ரூபாய்க்கு நான்கு மின் குமிழ்களை வாங்கினார். ஒரு மின் குமிழின் விலை யாது?

(3) ஓர் எண்ணை இரண்டினால் பெருக்கும்போது விடை 206 ஆகும். அவ்வெண் யாது?

**21** தரப்பட்டுள்ள உருக்கள் ஒவ்வொன்றிலும் ஒரு சமச்சீர்க் கோடு வீதம் வரைந்து அரைவாசியை நிழற்றுவோம்.




**22** $\frac{1}{4}$ ஆனது நிழற்றப்பட்டுள்ள உருக்களின் எண்களைச் சுற்றி வட்டம் வரைவோம்.



**23** பிரசினங்களைத் தீர்ப்போம்.

(1) ஒரு கிணற்றை வெட்டுவதற்கு இரண்டு நாட்கள் எடுத்தன. முதலாம் நாளில் 4 m 75 cm ஆழத்திற்கும் இரண்டாம் நாளில் 2 m 80 cm ஆழத்திற்கும் கிணறு வெட்டப்பட்டது. இரண்டு நாட்களின் இறுதியில் கிணறு எவ்வளவு ஆழத்திற்கு வெட்டப் பட்டிருந்தது?

(2) வீதியிலிருந்து வீட்டிற்கு உள்ள தூரம் 12 m ஆகும். வீதியிலிருந்து வீட்டிற்கு நீரைப் பெறுவதற்காக 3 m 55 cm , 5 m 75 cm நீளமுள்ள இரு குழாய்கள் இருந்தன.

(i) அவ்விரு குழாய்களினதும் மொத்த நீளம் எவ்வளவு?

(ii) வீதியிலிருந்து நீரைப் பெறுவதற்கு மேலும் என்ன நீளமுள்ள ஒரு குழாய் தேவை?

**24** ஒரு குறித்த பிரதேசத்தில் சில நகரங்கள் அமைந்துள்ள விதம் பின்வரும் படத்தில் காட்டப்பட்டுள்ளது.




(1) நகரம் A இற்கு வடக்கே இருக்கும் நகரங்கள் யாவை?

(2) நகரம் D இற்குத் தெற்கே இருக்கும் நகரம் யாது?

(3) நகரம் D இற்குத் கிழக்கே இருக்கும் நகரங்கள் யாவை?

(4) நகரம் B இற்கு எத்திசையில் நகரம் F இருக்கின்றது?

(5) நகரம் J இற்கு எத்திசையில் A , D , E ஆகிய நகரங்கள் இருக்கின்றன?

# மீட்டற் பயிற்சி – ஆண்டிறுதி 37

**25** நூலகத்தில் தரம் 4 மாணவர்களினால் வாசிக்கப்பட்ட புத்தகங்கள் தொடர்பான தகவல்கள் கீழே உள்ள உருவில் காட்டப்பட்டுள்ளன.




(1) மேற்குறித்த தகவல்களைக் கொண்டு கீழ்வரும் அட்டவணையை பூர்த்தி செய்வோம்.

(2) அட்டவணையில் உள்ள தகவல்களை ஒரு நிரல் வரைபில் வகைகுறிப்போம்.

(3) (i) அதிகமான மாணவர்கள் வாசித்த புத்தகம் எது? அவர்களுடைய எண்ணிக்கை யாது?

(ii) குறைவான மாணவர்கள் வாசித்த புத்தகம் எது?

| புத்தகங்களின் பெயர் | தடவைகளின் எண்ணிக்கை | எண்ணிக்கை |
|---|---|---|
| சித்திரக்கதை | ||||| | 5 |
| சிறுவர் மலர் | | |
| நன்னெறி | | |
| நீதிக்கதைகள் | | |
| திருக்குறள் | | |

(4) நன்னெறிப் புத்தகங்களை வாசித்த மாணவர்களை விடத் திருக்குறள் புத்தகத்தை எத்தனை மாணவர்கள் கூடுதலாக வாசித்தனர்?

(5) சித்திரக்கதையையும் சிறுவர் மலரையும் வாசித்த மாணவர்களின் மொத்த எண்ணிக்கை யாது?

(6) புத்தகங்களை வாசித்த மாணவர்களின் மொத்த எண்ணிக்கை யாது?

**26** பின்வரும் திண்மங்களின் முன்பக்கத் தோற்றத்தை எழுத்து A இனாலும் பக்கத் தோற்றத்தை எழுத்து B இனாலும் திட்டத்தை எழுத்து C இனாலும் உரு மீது குறிப்போம்.

(1)


(2)


(3)


(4)


(5)


**27** தரப்பட்டுள்ள பணத்தை நாணயக் குற்றிகளின் மூலம் மாத்திரம் செலுத்தத்தக்க விதத்தை எழுதுவோம்.

(1)  ..........................................................................

ஒரு ரூபாய் இருபத்தைந்து சதம்

(2)  ..........................................................................

எட்டு ரூபாய் ஐம்பது சதம்

(3)  ..........................................................................

பன்னிரண்டு ரூபாய்

(4)  ..........................................................................

பதினேழு ரூபாய் இருபத்தைந்து சதம்

**28** பொருள்களின் விலைகளுக்கேற்பக் கீழே கேட்கப் பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுவோம்.

|  |  |  |  |
|---|---|---|---|
| 500.00 ரூபாய் | 320.00 ரூபாய் | 230.00 ரூபாய் | 175.00 ரூபாய் |

(1) ஒரு சோடி செருப்புகளையும் ஒரு தொப்பியையும் வாங்குவதற்குத் தேவையான பணம் யாது?

(2) ஒரு மாலையையும் ஒரு தொப்பியையும் வாங்குவதற்குச் செலுத்த வேண்டிய பணம் யாது?

(3) 200 ரூபாயைக் கொடுத்து ஒரு சோடி செருப்புகளை வாங்கும்போது மீதிப் பணம் யாது?

(4) (i) ஒரு பை, ஒரு மாலை, ஒரு தொப்பி ஆகியவற்றை வாங்கு வதற்குச் செலுத்த வேண்டிய பணம் யாது?

(ii) மேலே குறிப்பிட்ட மூன்று பொருள்களையும் வாங்குவதற்கு கையில் ஆயிரம் ரூபாயை வைத்திருக்கும் ஒருவருக்கு மேலும் எவ்வளவு பணம் தேவை?

**29** மீதிப் பணத்தைக் காண்போம்.

| பொருள் | பொருளின் விலை | | கொடுத்த பணம் | | மீதிப் பணம் |
|---|---|---|---|---|---|
| | ரூபாய் | சதம் | ரூபாய் | சதம் | ரூபாய் சதம் |
| சவர்க்காரம் | 55 | 00 | 100 | 00 | ........................ |
| பருப்புப் பைக்கற்று | 215 | 00 | 500 | 00 | ........................ |
| பற்பசைப் பைக்கற்று | 85 | 00 | 100 | 00 | ........................ |
| சலவைத் தூள் பைக்கற்று | 200 | 00 | 500 | 00 | ........................ |
| நூடில்ஸ் பைக்கற்று | 118 | 00 | 200 | 00 | ........................ |

**30** தரப்பட்டுள்ள விலைக்கும் அளவுகளுக்கும் ஏற்பச் சிட்டைகளை நிரப்புவோம்.

| பொருள் | அளவு | பெறுமானம் ரூபாய் | சதம் |
|---|---|---|---|
| உருளைக்கிழங்கு | 1 kg | 100 | 00 |
| கருவாடு | 250 g | 300 | 00 |
| போஞ்சி | 500 g | 80 | 00 |
| கோதுமை மா | 1 kg | 110 | 00 |

(1)

| பொருள் | அளவு | பெறுமானம் ரூபாய் சதம் |
|---|---|---|
| உருளைக்கிழங்கு | 500 g | ....................... |
| கருவாடு | 1 kg | ....................... |
| கோதுமை மா | 2 kg | ....................... |
| மொத்தம் | | ....................... |

(2)

| பொருள் | அளவு | பெறுமானம் ரூபாய் சதம் |
|---|---|---|
| உருளைக்கிழங்கு | 250 g | ....................... |
| கருவாடு | 500 g | ....................... |
| போஞ்சி | 250 g | ....................... |
| மொத்தம் | | ....................... |

# மீட்டற் பயிற்சி – ஆண்டிறுதி 37

**31** பின்வரும் பாத்திரங்களில் உள்ள திரவங்களின் அளவுகளைக் கொண்டு கீழே கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுவோம்.



| A | B | C | D | E | F | G |
|---|---|---|---|---|---|---|
| 2 *l* | 1 *l* | 1 *l* 500 *ml* | 500 *ml* | 225 *ml* | 425 *ml* | 200 *ml* |

(1) பாத்திரம் B இலும் பார்க்கப் பாத்திரம் C இல் எவ்வளவு திரவம் கூடுதலாக உள்ளது?

(2) F , G ஆகிய பாத்திரங்களிலும் உள்ள திரவங்களைச் சேர்க்கும்போது கிடைக்கும் அளவு பாத்திரம் B இல் உள்ள திரவத்தின் அளவிலும் எவ்வளவினால் கூடியது?

(3) E , G ஆகிய பாத்திரங்களில் உள்ள திரவங்களின் அளவுகளைச் சேர்க்கும்போது அது எந்தப் பாத்திரத்தில் உள்ள திரவத்தின் அளவுக்குச் சமமாகும்?

(4) பாத்திரம் C இல் உள்ள திரவத்தின் அளவுக்குச் சமமாக இருப்பதற்கு பாத்திரம் D இனால் எத்தனை தடவை திரவத்தை இடவேண்டும்?

(5) எந்த இரு பாத்திரங்களில் உள்ள திரவங்களைச் சேர்க்கும்போது திரவத்தின் அளவு 3 *l* 500 *ml* ஆகும்?

**32** அட்டவணையில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவோம்.

| மில்லிலீற்றர் | லீற்றர் மில்லிலீற்றர் |
|---|---|
| 1321 *ml* | ................................ |
| .................. | 6 *l* 70 *ml* |
| 7010 *ml* | ................................ |
| 2050 *ml* | ................................ |
| .................. | 3 *l* 125 *ml* |
| .................. | 4 *l* 500 *ml* |

**33** வசனம் எழுதித் தீர்ப்போம்.

(1) ஒரு தொட்டியில் இருந்த நீரின் அளவு 200 *l* 800 *ml* ஆகும். அதில் முற்றாக நீர் நிரப்புவதற்கு மேலும் 145 *l* 200 *ml* நீரை இடவேண்டும். தொட்டி கொள்ளும் நீரின் மொத்த அளவு யாது?

(2) ஒரு பீப்பாயில் 50 *l* தேங்காய் எண்ணெய் இருந்தது. வாரத்தில் தேங்காய் எண்ணெயை விற்ற பின்னர் எஞ்சியிருந்த அளவு 7 *l* 500 *ml* ஆகும். வாரத்தின்போது விற்கப்பட்டுள்ள தேங்காய் எண்ணெயின் அளவு யாது?

(3) ஒரு கலனில் 2 *l* 500 *ml* நீர் இருந்தது. அதிலிருந்து நீரைக் குடிப்பதற்கு எடுத்த பின்னர் எஞ்சியிருந்த நீரின் அளவு 1 *l* 700 *ml* ஆகும். குடிப்பதற்கு எடுத்த நீரின் அளவு யாது?

**34** தரப்பட்டுள்ள நாட்காட்டியைக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுவோம்.

(1) நாட்காட்டியில் எந்த மாதம் காட்டப்பட்டுள்ளது?

(2) எட்டாந் திகதி எந்த நாளாகும்?

(3) இம்மாதத்தில் எத்தனை திங்கட் கிழமைகள் உள்ளன?

(4) 25 ஆந் திகதிக்கு இரண்டு நாட்களுக்கு முந்திய நாள் எந்த நாள் ஆகும்?

| ஜனவரி 2019 | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| தி | செ | பு | வி | வெ | ச | ஞா |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | | | | |

(5) இம்மாதத்தில் எத்தனை நாட்கள் உள்ளன?

# மீட்டற் பயிற்சி – ஆண்டிறுதி 37

**41** ஒவ்வொரு கடிகார முகத்திலும் காணப்படும் நேரத்தை வெற்றிடத்தில் எழுதுவோம்.

(1)


..................................

(2)


..................................

(3)


..................................

**42** தரப்பட்டுள்ள நேரத்தைக் கடிகார முகத்தில் வகை குறிப்போம்.

(1)


12.20

(2)


4.10

(3)


7.50

# பின்னிணைப்பு - I





## பின்னிணைப்பு - 2



